உ
சிவமயம்

REGISTERED AS
NEWSPAPERINA
GEYLON
P. M. G. NO. H. A.
19/300 of 1939

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணி மாதம்.
28-ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புஂ. ருக] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஞூ மார்கழி மீ அ உ (1947 டிசெம்பர் 23 செவ்வாய்க்கிழமை) [ இல ஏக

## நாம் யார்?

கவிராஜ பண்டிதர், நா. கனகராஜையர், B. O. L.

(முற்றொடர்)

நம் ஆலயங்களிலும் மடங்களிலும் நெடுங்காலமாக நாம் போற்றி வந்திருக்கும் நம் மதத்தின் சின்னங்களை இன்றும் அழியாது காக்கும் பொறுப்பு நமக்கே வருகிறது. "இவற்றை இன்னவண்ணம் அமைக்க, இன்னவண்ணம் வளர்க்க, இன்னவண்ணம் போற்றுக" என்று உரைக்கவந்த நூல்கள் ஆகமங்களாம். "வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன் நூல்" என்றார் திருமூலரும். வேதம் ஆகமம் சாத்திரம் என்ற வகைகளில் உரைக்கப்பட்ட உண்மைகளை விளக்கி எளிதாக மக்கள் மனப் பண்புக்கு அமைய உரைக்கவே புராணங்களும் இதிகாசங்களும் எழுந்தன. எல்லாரும் சாத்திரங்களையும் ஆகமங்களையும் வேதங்களையும் பயில்வதென்பது எளிதில்லை. தாய்மொழியிலே அமைந்திருக்கும் வேதங்களாகிய தேவாரம் திருவாசகம் திருமந்திரம் திருவாய்மொழி முதலிய அருள் மொழிகளையாவது தெள்ளத்தெளிய உணர்ந்துகொள்ள வேண்டு மென்ற உணர்ச்சி நம் இனத்தில் எழவேண்டும்.

ஆலயங்களில் பலவகை மூர்த்தங்கள் இருப்பதற்கு என்ன காரணம்? ஒன்றே இருந்தாற் போதாதா? சிவநூல்கள் வைணவ நெறியையும், வைணவ நூல்கள் சிவநெறியையும் இழிப்பது உண்டே, இந்தவழி நம் நாடு இப்பொழுதுள்ள நிலையில் அவசியம் தானா? தெய்வத்துக்கு உருவம் அமைத்துத்தான் வழிபடவேண்டுமா? புராணங்களில் எத்தனை கேள்விக்காகாத கதைகள் உள்ளன? அவற்றையெல்லாம நம்பத்தான் வேண்டுமா? இதிகாசங்கள் எல்லாம் சரித்திரங்கள் தானா? அடியார் வரலாறுகளில் நம்பத்தகாதவை எத்தனையுண்டு? இவற்றையெல்லாம் நம்பத்தான் வேண்டுமா? ஆலயத்தள் அமலனுக்கு அணுகித் தொண்டுபுரிவார் நம்மைக்காட்டிலும் எவ்வகையிற் சிறந்தவர்? நாம் ஏன் அவர்க்குத் தாழவேண்டும்? மடத்தலைவரும் மனிதர்தானே! நாம் ஏன் அவரைத் தெய்வம்போல நினைத்து வணங்கவேண்டும்? ஒருவர் ஒன்று சொன்னால் நாம் உடனே அதைவேத வாக்கியம் என்று நம்பிவிட வேண்டுமா? வேதந்தான் என்ன? எத்தனை தெய்வங்களைப் பேசுகிறது? எல்லாம் தெய்வம்தான் என்றால் மற்ற மதங்களின் போக்கு இப்படி இல்லாதிருப்பதற்கு என்ன காரணம்? இப்படி எத்தனையோ கேள்விகள் நவீனர் உள்ளத்திலே எழுகின்றன. இவற்றுக்கு எல்லாம் விடை கூறியபிறகு தான் நாம் இந்த வினா வழுத்தக்காரரை நம்வழியிலே அழுத்தமான பற்றுள்ளவராகச் செய்யவியலும்.

மதப்பற்று ஒருசிலர்க்கு உயிரினும் உயர்ந்ததாய் இருக்கிறது, பிறர்க்கு நினைத்தவளவில் மாட்டிக் கொண்டு அவிழ்த்தெறியும் சட்டைபோல இருக்கிறது. மற்றும் சிலர்க்கு மதம் என்ற பேரைக் கேட்கும்போதே வெறுப்பு வருகிறது. அருவருக்கத்தக்க பல செயல்கள் மதத்தின் பெயரால் நடப்பதாக இக் கூட்டத்தார் நினைக்கின்றனர். எப்பொழுதோ எங்கேயோ ஒரு பெரியவர் ஆலயங்கள் விபசார விடுதிகள் என்று சொன்னாராம்; அதனால் மற்ற எந்தவழியிலும் அந்தப் பெரியவர் வாக்கை நம்பாத பின்பற்ற நினையாத இப் புண்ணிய மூர்த்திகள் ஆலயங்கள் விபசாரவிடுதிகள் என்று அவர் கூறியதாகப் பறைசாற்றுவதிற் பெருமகிழ்ச்சி கொள்கிறார்கள். அந்த விபசார விடுதிகளைச் சீர்திருத்த இந்தப் புண்ணிய மூர்த்திகள் என்னசெய்தார்களோ என்பது இன்றளவும் விளக்கமாக இல்லை.

இந்துக்களுக்கு உரிய ஆலயங்கள் பிற்காலச் சோழமன்னர் விஜயநகர மன்னர் நாயக்க மன்னர் நம நாட்டில் அரசாண்ட காலம் வரையில் பெரிய கலைக்கருவூலங்களாக விளங்கி வந்தன என்பதைக் கண்ணுள்ளவர் காணலாம். காதுள்ளவர்கேட்கலாம்; அறிவுள்ளவர் அறியலாம், இந்த ஆலயங்கள் எப்பொழுது விபசார விடுதிகள் ஆயின என்பது இன்னும் தெரியவில்லை. பரத நாட்டியம் பயின்று தேவதாசிகளாக உலகவாழ்வை வெறுத்து இருந்த பெண்மக்கள் இறைவனுக்கே அடிமை பூண்டவராய் இருந்த நல்வழக்கம் மாறி, அப்பெண்கள் பொது மகளிர் ஆகும் காலம ஒன்று தோன்றியது. அன்று முதல் அவர்கள் செய்த தொழில இழிவு என்று அறியப்படாமல் இல்லை. சமீப காலத்திலேகூட ஆலய நடனமாணிகள் இளமையில் ஒழுக்கம் குறையாதிருந்ததை நாம் கண்கூடாக அறியலாம. பெரியபுராணத்தில் சுந்தரர் மணந்த பரவையாரை இந்தப் பெண்மக்கள் இனத்தில் வாழ்ந்ததாக நாம் அறிந்தாலும் அவரைத் தெய்வமாக மதிக்கத்தக்க பெருமை அவர் ஒழுக்கத்துக்கே உண்டு என்பதைப் பெரிய புராணத்தைப் படித்த எவரும் மறுக்கவியலாது, சிவகைங்கரியமே வாழ்வின் நோக்கமாகக் கொண்ட சங்கிலியார் வரலாற்றையுஞ் சிறிது சிந்தித்துப் பார்ப்போம். இவர்கள் நம் நாட்டில் வாழ்ந்து ஆயிர ஆண்டுகளுக்கு மேல் ஆகவில்லை. கலைப்பொருட்டே பரவையார் குலப்பெண்டிர் நெருங்கிய ஆலயங்களை வேறுவகையாக நாம் நினைப்பதற்கு எவ்வகையிலும் நியாயமில்லை

பொதுமகளிர் என்ற ஒரு இனமே இருக்கக்கூடாது என்ற சட்டம் நம்நாட்டில் உறுதியாய் இருந்தும் உண்மையில் தீயவொழுக்கம் ஆண் இனத்தை விட்டு ஒழிந்துவிட்டதா? அதற்குப் பெண் இனம் என்ன செய்யும்? குடிக்கக்கூடாது என்ற சட்டம் வந்தால் அயல் ஊர் போய்க் குடித்து வெகுபணம் அழித்துவிட்டுப் புகை வண்டிகளில் வரும புண்ணியாத்மாக்களை நாம் பார்க்கவில்லையா? அது போல பெண்ணொழுக்கம் காக்க என்ன சட்டம் செய்தாலும் ஆணினத்தின் நடை நல்வழியில் உறுதிப்படாதவரையில் அதை நிலைநாட்ட இயலாது. இதனால் உலகில் எங்கும்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

---

### பிரார்த்தனை

திருச்சிற்றம்பலம்

பாசம் பராஞ்சோதிக் கென்பா யிராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்

---

## மிருகபலி வேண்டாம்

### சென்னை இராஜாங்க சபையில் மசோதா

சென்னை இராஜாங்க சபையின் அங்கத்தவராயுள்ள ஸ்ரீமான். எஸ். பி. ஆதித்தன், ஆலயங்களில் மிருகபலி செய்வதைச் சட்டபூர்வமாகத் தடுக்க ஓர் மசோதாவை எடுத்தாண்டிருக்கிறார். அதனை எடுத்தாளும் போது ஸ்ரீமான் ஆதித்தன் பின்வருமாறு கூறினார்:-

"ஆலயங்களில் மிருகங்களைப் பலியிடுதல் ஓர்கொடிய வழக்கம் மிலேச்சத் தனமான கொள்கை இதனை நீக்க வேண்டு மென்று பொதுஜன அபிப்பிராயம் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. அநேக இடங்களில் ஊரவர்களே தாமாகச் சேர்ந்து, தாம் இருக்கும் இடங்களில உள்ள ஆலயங்களில் இந்தக் கொடிய வழக்கத்தை நிற்பாட்டிவிட்டார்கள், பொதுஜன அபிப்பிராயத்துக் கிணங்க, பொதுஜன அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அரசாங்கமும் ஒத்துழைக்க வேண்டிய காலம் இப்போது வந்துவிட்டது.

"எனனுடைய கிராமத்திலே யுள்ள ஓர் கோவிலில இதுவரை ஆடு கோழி பலியிடப்பட்டு வந்தது. ஆனால், இப்போது அந்தக் கொடிய வழக்கம் கைவிடப்பட்டுவிட்டது. ஆடு கோழியைப் பலியிடுதற்குப் பதிலாகப் பழவகைகளை நிவேதனம் செய்ய வேண்டும் என்று நாம் எம் கிராமத்திலேயே தீர்மானித்துவிட்டோம்.

"ஆலயங்களில், அல்லது ஆலயங்களைச் சுற்றியுள்ள வீதிகளில் பலியிடுதலைத் தடுப்பதே இம்மசோதாவின் நோக்கம். பொதுஜனங்களுக்கு இப் பலியிடும் வழக்கம் விருப்ப மில்லாத போதிலும், சில கோவிற் பூசாரிமாரும், எஜமானரும், பாமர ஜனங்களுக்குப் பலவிதமான ஏமாற்றுக் கதைகளைக்கூறி, அவர்களை வெருட்டி அக்கொடிய வழக்கத்தைத் தொடர்ந்து அநுட்டிக்கச் செய்கிறார்கள். அதனைத் தடுப்பதற்காகவே, ஓர்கோவிலைச் சேர்ந்த எவரும், இப்படியான பலியிடுதலிற் பங்குபற்றக் கூடாது என்ற இன்னோர் விதானத்தை இந்த மசோதாவிற் சேர்த்திருக்கிறேன், அப்படிக் கோவில் எஜமானரோ, பூசகரோ வேறும் யாரோ பங்குபற்றினால், அவர்களுக்குத் தண்டனை விதிக்க இம்மசோதாவில் இடமுண்டு."

உள்நாட்டு மந்திரியான டக்ரர் பி. சுப்பராயன், இம்மசோதாவை அரசாங்கம் எதிர்க்கமாட்டாது என்று கூறினார். கொஞ்ச நேரவிவாதத்தின் பின், ஷை மசோதாவை எடுத்தாள ஸ்ரீமான். ஆதித்தனுக்கு அநுமதி யளிக்கப்பட்டது.

கூடிய சீக்கிரம் மேற்படி மசோதா சட்டபூர்வமாகிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது,

---

## பொல்லாத காலம்

### வால் வெள்ளித் தோற்றம்பற்றி ஜோஸியம்

சென்ற வாரம் ஓர் வால் வெள்ளி இலங்கையிலும் உலகின் வேறு சில பாகங்களிலும் தோற்றப்பட்டது. அதன் பலாபலன்களைப் பற்றி மிஸ்ரர். எஸ். லக்ஷாதிபதி என்னும் ஜோஸியர் கொழும்பு டெயிலிநியூஸ் பத்திரிகையிற் பின்வரும் கருத்துப்பட எழுதுகிறார்:

இப்போது காணப்பட்ட வால் வெள்ளி ஓர் விசேஷ தன்மை வாய்ந்தது. அதன் வால் மேற்பக்கமாக இருப்பது அதன் விசேஷ தன்மையாகும். இப்படித் தலைகீழாகவும

தொடர்ச்சி 4 ம் பக்கம்

---

## இலங்கை—இந்திய உறவு

### விரைவில் ஏற்படும் என்ற நம்பிக்கை

இலங்கை-இந்திய சம்பந்தமான சமரசப் பேச்சுகள், வருகிற 28-ம் தேதி ஆரம்பமாகி 30 ம் திகதி முடிவடையும். இலங்கைப் பிரதமர் மிஸ்ரர். டி. எஸ். சேனநாயக்கா இவ்விஷயமாகப் புதுடெலகிக்கு 27-ம் திகதி விஜயம் செய்வார். அவர் அங்கே கவர்னர் ஜெனரல் மவுன்ற்பேற்றன் பிரபுவின் விருந்தினராக விருப்பார்.

இலங்கையில் இந்திய அரசாங்கத்

தொடர்ச்சி 4 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஹூ மார்கழி அ௨ செவ்வாய்க்கிழமை


## கோயில்களில் மிருகபலியைத் தடுக்க முயற்சி

இந்த இலங்கையிலே சிற்சில கோயில்களில் ஆடு கோழிகளைத் தெய்வத்தின் சந்நிதியிற் கொண்டுபோய் வெட்டிப் பலியிடுதலாகிய தீய கொள்கை சிற்சில இடங்களில் இன்னமும் இருக்கின்றதல்லவா; இந்த மாபாதகச்செயலை, சைவத்திற்கு மாறான கொள்கையை, அக்காலந்தொட்டு இக்காலம்வரையிலுள்ள சீவகாருண்யத்தோடு கூடிய மக்கள், துண்டுப் பத்திரவாயிலாகவும், கூட்டங்கள் கூட்டிப் பிரசங்கவாயிலாகவும் தடுத்தற்கான முயற்சிகளைச் செய்து வந்தனர்; இவற்றின் பயனாக இங்குள்ள இப்படியானகோயில்கள் பலவற்றில் ஆடு கோழிகளைவெட்டிப் பலியிடுதலாகிய துர்ச்செயல் தேய்ந்து வரலாயிற்று. ஆனாலும் மழைவிட்டுந் தூவானம் மாறவில்லை யென்றவாறு, மிகச் சிலவினுஞ் சில கோயில்களில்இந்தமிருகபலியிடுதலாகிய சீவகாருண்ய மற்ற செயல், இன்னமுங் காணப்படுகின்றது; இதனைத் தடுத்தற்கு ஊர்கள் தோறுமுள்ள சைவ இளைஞர் சங்கத்தினர் முதலாயினோர், இப்பொழுதும் தங்களால் ஆனமட்டும்முயற்சிசெய்து வருகிறார்கள்; இதனாற் காலகதியில் இப்பாதகச் செயல்கள் அறவே யொழிந்துபோமென்பது இந்நாட்டிலுள்ள பெரியார் கொண்ட நம்பிக்கையாகும்.

இந்நாட்டு விஷயம் இங்ஙனமாக, இந்தியாவில் மிருகபலியிடுதலாகிய செயல் பல கிராமங்களில் இன்னும் நேர்ந்துவருகிறதென்பது அறியத்தகும்; அந்நாட்டிலும் அக்காலந்தொடக்கம் இற்றை வரையில் கோயில்களில் மிருகபலியிடுதலாகிய சமய விரோதமான செயலைத் தடுப்பதற்கு அந்நாட்டிலுள்ள அறிஞர்கள் பல்லாற்றானும் முயன்று வருகிறார்கள்; வருகின்றனரெனினும் அந்த அக்கிரமச் செயல் அதிகங் குறைந்தபாடில்லையாம்.

இவைகளை யுத்தேசித்துப்போலும் இப்பொழுது சென்னை அரசினர் தெய்வ சந்நிதியில் ஆடு கோழிகளை வதைத்துப் பலியிடுதலாகிய அடாத செயலைத் தடுத்தற்கான பிரமாணத்தை விதித்தற்கு முயற்சி செய்பலாயினர்; சென்னை இராஜாங்க சபையிலேயுள்ள காங்கிரஸ் பிரதிநிதியாகிய திரு. S. B. ஆதித்தன் என்பவர் கோயில்களில் மிருகபலி யிடவொண்ணா தென ஒரு பிரமாணத்தை அச்சபையில் நிறைவேற்றுதற்காக முற்பட்டிருக்கின்றனரென அறியலானோம். அந்தச் சட்டத்தி(மசோதா)ன் விபரம் இற்றைப் பிரசுரத்தில் பிறிதோரிடத்தில் வெளியிடப்பட்டுள்ளது; அச்சட்டம் நிறைவேறின் காலகதியில் இந்தியா முழுவதிலும் மிருகபலியிடுதலாகிய பழைய பெரிய தீமை அறவே யொழிந்துவிடுமெனக் காத்திருக்கலாம்; இந்தியாவிலே சுவதந்திரத்தோடு கூடிய புதிய அரசினர் மதுபானம், மிருகபலியிடுதல முதலிய மகாபாதகங்களைப் பிரமாண வாயிலாக ஒழித்து விடுதற்கான ஒழுங்குகளைச் செய்யத் தொடங்கியிருக்கின்றார்கள்.

சுயராச்சியம் பெற்றபின் இந்திய அரசினர் செய்யத் தொடங்கியிருக்கும் சீர்திருத்தச் செயல்களுட்பல இந்த இலங்கை மக்களுக்கும் ஏற்றனவாகும்; மதுபானநீக்கம் மிருகபலி யிடுதலை யொழித்தலாகிய இந்நல்ல கருமங்களைச் செய்யும் விஷயத்தில் இந்திய அரசினரை இலங்கையரசினரும் பின்பற்றி நடத்தல் நன்மையாகும்; இலங்கையிலுள்ள பிரதான சமயங்கள் நான்கனுள் கோயிலிலே பலியிடுதலாகிய அடாத செயல் ஒருசமயத்திலும் விதிக்கப்படவில்லையாகும்; ஆனாற் சைவசமயத்தவர்களென்று தம்மைச் சொல்லிக் கொண்டிருக்கும் பாமரர் சிலரினுஞ் சிலரே, ஆகமவிதிப்படியமைத்து நித்திய நைமித்திகங்கள் விதிப்படி நடவாதனவாகிய சிறு கோயில்கள் சிலவற்றில் ஆடு கோழிகளை வெட்டிப் பலியிடத் தலைப்பட்டுச் சைவசமயத்தினரெல்லார்க்கும் பெரும் இழுக்கையும் தீராவசையையுந் தேடிவிடுகிறார்கள்; இந்த விஷயத்திலே இலங்கையிலுள்ள சைவ சமயசபைகள், சங்கங்கள், சைவ இளைஞர் சங்கத்தினர், தனித்தனி அபிமானிகளாகிய அனைவருந் திரண்டு முயற்சி செய்து இலங்கைப் பாராளுமன்றத்திற்கு இத்தீமையை எடுத்துக் காட்டி, கோயில்களில் ஆடுகோழிகளைக் கொலைசெய்து பலியிடுதலாகிய மகாபாதகத்தை அறவேயொழித்துவிடும்படி செய்தல் வேண்டும்.

"கொல்லாவிரதம்
குவலயமெல்லா மோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவது
என்இச்சை பராபரமே"

— தாயுமானவர்

## மாவிநியோகம்

இப்போது சிலகாலமாக மக்களின் இன்றியமையா, உணவுப் பொருள்களில் ஒன்றாகவிருக்கும் கோதுமைமா தட்டுப்பாடின்றி எவ்வளவும் பெற்றுக்கொள்ளலாம் என்று இருந்தது. அதன்படி ஓர் சிலவாரகாலமாக, இங்கேயுள்ள சங்கக்கடைகளிலாக, மற்றும் தனிப்பட்ட வியாபாரிகளிடமாக ஊரவர் தங்களுக்குவேண்டிய மாவை வாங்கி ஒருவாறு பசியாற வருவாராயினர்.

இப்போது பழைய குருடி கதவைத் திறவடி என்றாங்கு, சங்கக் கடைகளில் ஓர் ஆளுக்கு ஓர் இருத்தல் மா மாத்திரமே உதவப்பட்டு வருகிறது. இதற்குக்காரணம்என்ன? மா விநியோக [illegible] குறைத்துவிட்ட[illegible]த்துவிட்டால் அதற்கான காரணம் என்ன? அப்படிக் குறைக்குமுன் போதிய அறிவித்தல் ஊரவர்க்கு அளிக்கப்பட்டதா? என்னும் இன்னோரன்ன கேள்விகள் இச்சந்தர்ப்பத்தில் எழுகின்றன.

இலங்கையில் இப்போது மாவிஷயமாகத் தட்டுப்பாடு இல்லை, ஆனால், சில தனிப்பட்ட வர்த்தகர், ஏற்கனவே பெருந்தொகையான மாமூடைகளை வாங்கிச் சேகரித்துவிட்டனர். சங்கக்கடைகளிலும் ஏனைய "கூப்பன்" கடைகளிலும் ஊரவர் விரும்பியவாறு மா விற்கப்பட்டு வந்ததால் தனிப்பட்ட வியாபாரியாரை ஊரவர் அபிமானிக்கவில்லை: அதன் காரணமாக அவர்களிடம் பெருந்தொகை மாக்கிடந்து பழுதாகின்றது இவர்களுக்குச் சகாயம் செய்யவே, சங்கக்கடைகளுக்கு அரசாங்கம் உதவி வந்த மாவின் அளவைக் குறைத்துவிட்டது என்ற ஓர் வதந்தி சரியாகவோ, பிழையாகவோ, ஊரிற் பரவி வருகிறது. இலங்கையில் மா போதிய அளவுக்கு இருக்கிறதென்பதையும், தனிப்பட்ட வர்த்தகரிடம், அந்த மாவை எவ்வளவு அளவுக்கும் பெறலாம் என்பதையும் யோசிக்கும்போது, இந்த வதந்திக்கு ஆதாரம் இல்லாமலில்லை என்றே எண்ண வேண்டியிருக்கிறது.

சங்கக்கடை என்றால் என்ன, தனிப்பட்ட வர்த்தகர்கடை என்றால் என்ன, கட்டுப்பாட்டு விலைக்கு மாக்கிடைக்குமானால், இப்போதுள்ள நிலைமையைப்பற்றி ஜனங்கள் குறைகூற மாட்டார்கள், ஆனால் கரியும் வீட்டிற் பிடுங்கியதாறி என்ற விதமாகக் கருமமாற்றும் தனிப்பட்ட வர்த்தகர்கள் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள முனைந்து கட்டுப்பாட்டு விலைக்குத் தம்மிடம் இருக்கும் மாவை விற்க மறுக்கிறார்கள். மாவுக்கும் தீர்வையை அரசாங்கம் [illegible] என்ற [illegible] சில வர்த்தகர்கள் பொதுஜனங்களுக்குக் கூறி, இருத்தல் ஒன்று 25 சதம் தொடக்கம் 30 சதம் வரைக்கும் விற்கத் தலைப்பட்டுவிட்டனர். யாழ்ப்பாணம் பெரியகடையில், கட்டுப்பாட்டு விலைக்கு மாவைப் பெற முடியாது. இந்தக்கேவலமான அநியாயமான நிலைக்குக் காரணர் யாரென்று நாம் அரசாங்கத்தைக் கேட்கிறோம். அரசாங்கம் ஊரவர்களின் அபிமானத்தையும ஆதரவையும் பெறவிரும்பினால், அது உடனே, பழையபடி வேண்டிய மாவைச் சங்கக் கடைகளுக்குக் கொடுக்க வேண்டும. கேவலம் ஓர் சில தனிப்பட்ட வர்த்தகருக்காக இந்த இலங்கை யரசாங்கம் நடக்கவில்லை என்பதனையும், அத்தனிப்பட்ட வர்த்தகர்களின் குமமாளத்திற்கும் சுயநல வாஞ்சைக்கும் அரசாங்கம் இணங்கக் கூடாது என்பதனையும் இச் சந்தர்ப்பத்தில் எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம்.

## நாவலரை நினைவு கூர

### ஞாபகார்த்தப் பணிசெய்ய முடிவு

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் சைவத்துக்கும் தமிழுக்கும் ஆற்றிய தொண்டை நினைவூட்டுதற் பொருட்டும், செயற்கரும செயல்களைச் செய்த அப்பெரியாருக்கு நாம் காட்டவேண்டிய நன்றிக்கு அறிகுறியாகவும் அவர் பிறந்த நாடாகிய யாழ்ப்பாணத்தில் ஓர் சிறந்த ஞாபகசின்னம் அமைக்கவேண்டும் என்று ஓர் தீர்மானம் சென்ற சனிக்கிழமை (20-12-47) வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் நிகழ்ந்த பெரிய கூட்டத்தில் நிறைவேறியது.

நாவலர் திருநாட் கொண்டாட்டம் சம்பந்தமாக மேற்படி கூட்டம் நிகழ்ந்தது. பிற்பகல் நாலுமணி தொடக்கம் யாழ்ப்பாணத்தின் தலைசிறந்த வித்துவான்களினால், நாதஸ்வரக் கச்சேரியும், வாய்ப்பாட்டுக்கச்சேரியும் நிகழ்த்தப்பட்டன, 7 மணியளவில் திரு. சு. நடேசபிள்ளை தலைமையில் பொதுக்கூட்டம் ஆரம்பமாயது. தலைவர் தமது முன்னுரையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் இந்த நாட்டுக்கு மாத்திரமல்ல, தமிழ்நாடு முழுவதுக்கும் ஆற்றிய சேவையையும, சைவப்பணியையும் சுருக்கமாக எடுத்துக்கூறி, அவர் திருநாளைத் தமிழ்மக்கள்-சைவமக்கள் ஆண்டுதோறும் இப்படிக் கொண்டாடவேண்டுமென்று குறிப்பிட்டார்.

விருதைநகர் ஸ்ரீ ச. கண்ணன் அடிகள், ஸ்ரீமான்கள் சி. நாகையா, ஏ. வி. மயில்வாகனம், க- கி. நடராஜன் முதலியோர் நாவலர் வாழ்க்கையின் பலதிறப்பட்ட அம்சங்களைப் பற்றி விரிவுரை நிகழ்த்தினர்.

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயப் பிரதமாசிரியர் திரு. ச. அம்பிகைபாகன் பீ. ஏ. மேலே காட்டிய தீர்மானத்தை எடுத்தாண்டு, அத்தீர்மானத்தை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டிய அவசியத்தை வற்புறுத்தினர்.

நியாயதுரந்தரர் திரு. அ. அருளம்பலம் மேற்படி தீர்மானத்தை ஆமோதித்துப் பேசினர். ஆண்டுதோறும் இப்படிக்கூடி நாவலர் மகத்துவத்தைப் பேசுவதால் மாத்திரம் பயன் இல்லை. அவரது ஞாபகார்த்தமாக, தமிழ் நாட்டுக்கும், சைவத்துக்கும் சேவை செய்யக் கூடிய ஓர் ஸ்தாபனமொன்றை நாம் இன்னே வகுக்க வேண்டும் என்று ஸ்ரீ அருளம்பலம்கூறி, யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார், ஓர் ஆச்சிரமம் நிறுவ நிச்சயித்து அதற்கான முயற்சிகளைச் செய்து வருகின்றனர் என்பதைக் காட்டி மேலும் கூறியதாவது:

"இந்த ஆச்சிரமத்தையே, நாவலர் பெருமானது ஞாபகார்த்தமாக நிறுவலாம. அந்த ஆச்சிரமம மூலமாகச் சைவத்தொண்டும், தமிழ்ப்பணியும் மிகவும முன்னேறும்: ஆகவே, அதனைக் கூடிய சீக்கிரம் நிறுவுவதில் ஒத்துழைத்தல் சைவ நன்மக்களது கடமையாகும்"

குறித்த தீர்மானம சர்வாங்கீகாரமாக நிறைவேறியது.

## அதிக வெங்காயம்

### இனிக் கிடைக்கலாம்

எகிப்திலிருந்து வெங்காயம் இறக்குமதியாவதை அரசாங்கம் தடைசெய்தபடியாலே, இலங்கையிலே சிலகாலமாக வெங்காயப்பஞ்சம ஏற்பட்டது. இப்போது எகிப்திய துறைமுகங்களிலே [illegible] குறைந்து விட்டபடியால், இனியும் குறித்த தடையுத்தரவு இருக்கவொண்ணாது என்று, இலங்கை மந்திரி மிஸ்ரர் பண்டாரநாயக்கா அதனை நீக்கி விட்டார்.

இப்படியாக மிஸ்ரர் பண்டாரநாயக்கா செய்வார் என்பதனை ஏற்கனவே யூகித்து கொழும்பு வர்த்தகர் சிலர் பெருந்தொகையான வெங்காயம் அனுப்பும்படி இந்திய வியாபாரிமார்க்கு அறிவித்திருந்தனர் அதன்பயனாக ஜனவரி நடுப்பகுதியில் 6000 தொன் வெங்காயம் இலங்கையில் இறக்குமதியாகும். வெங்காயத்தைவிட உருளைக்கிழங்கும் ஒர்[illegible]ளதொகை எகிப்திலிருந்து கிடைக்குமாம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மந்திரசபையில் மாற்றம்

## பிப்ரவரியுடன் நிகழுமாம்

[நமது அரசியல் நிருபர் எழுதுகிறர்]

வருகிற பிப்ரவரி மாதத்துடன் இலங்கையில் அரசியல் விஷயமாக அநேக மாற்றங்கள் ஏற்படும் என்று நான் அறிகிறேன். பிப்ரவரியில் இலங்கைக்குச் "சுயராச்சியம்" உத்தியோகபூர்வமாக வழங்கப்படும் அதனைத் தொடர்ந்து மந்திரசபையில் அநேக மாறுதல்கள் நிகழலாம். அநேகமாக சமசமாஜக்கட்சித் தலைவர் டக்ரர் என். எம். பெரேராவை மிஸ்ரர் சேனநாயக்கா தம் மந்திரசபையிற் சேர்ப்பார் என்பதற்கான உற்பாதங்கள் தோன்றுகின்றன. இப்போது இடதுசாரிகளுக்கிடையே ஒற்றுமையில்லை சமசமாஜிகள் ஓர்பக்கம், போல்ஷெவிக் லெனின் கட்சி இன்னோர்பக்கம். சமதர்மக்கட்சி இன்னோர்பக்கமாக எதிர்க்கட்சியிலிருந்துகருமம் ஆற்றுகின்றனர். இவர்களுக்கிடையே ஒற்றுமை ஏற்படுவதற்குப் பதிலாக, வரவர வேற்றுமை வளர்ந்துகொண்டே வருகிறது. இந்த நிலைமையில் எப்போதாவது இடதுசாரிகள் பலங்கொண்டு அரசாங்கத்தைக்கைப்பற்றுவது துர்லபம் என்பதை டக்ரர் என். எம். பெரீரா அறியாமலில்லை. இலங்கைச் சுதந்திர மசோதா விவாதத்தின் முடிவில் அவர் எதிராக வாக்களிக்காது நடுவுநிலைமைவகித்ததும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. அதிகாரமில்லாது சதா எதிர்க்கட்சியிலிருப்பதால் ஆம்பயன் இல்லை என்பதை டக்ரர் பெரீராவும், அவருடைய சமசமாஜத்தோழர்களும் உணர்கின்றனர் என்று விஷயமறிந்தவர்கள் பேசிக்கொள்கின்றனர். ஆகவே மிஸ்ரர் சேனநாயக்கா மந்திரசபையிற் சேரும்படி டக்ரர் பெரீராவைக் கேட்டால அதற்கு அவர் மறுக்கமாட்டார் என்று சொல்லிக்கொள்ளப்படுகிறது.

O

அரசாங்கத்திலே மிஸ்ரர் சேனநாயக்காவின் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அவ்வளவு செல்வாக்கில்லை. சுயேச்சை வாதிகளின் ஆதரவினலேயே மிஸ்ரர் சேனநாயக்கா அதிகாரத்தை இப்போது நடாத்துகிறர். நெல்லிக்காய் மூடைபோன்ற இச்சுயேச்சை வாதிகளின் ஆதரவைச் சாஸ்வதமாகப் பெறமுடியும் என்ற நம்பிக்கை மிஸ்ரர் சேனநாயக்காவுக்கு இல்லை ஆகவே தமக்கு ஆதரவாகசமசமாஜக்கட்சி போன்ற ஓர்பலமான கட்சியின் ஆதரவை நாடவும் முயற்சிக்கலாம், அத்துடன் இடதுசாரிகளின் செல்வாக்கை இம்மார்க்கத்தினல் அவர் வளர விடாது தடுக்கலாம். டக்ரர் பெரீரா மந்திரசபையிற சேர்ந்தால் அவர் அநேகமாகத் தொழிலாளர் பகுதி மந்திரியாவார். இப்போது அப்பகுதி மந்திரியாகவுள்ள ஐனப் ஜயா கல்வி மந்திரியாக்கப்படலாம். இப்போது கல்விமந்திரியாகவுள்ள மேஜர் ஈ. ஏ. நுகவெல வேறேர் பகுதிக்கு மாற்றப்படலாம்,

O

மேலே சொல்லிய மாற்றத்துடன், மேலும் சில மாற்றங்கள் மந்திரசபையில் ஏற்படும் என்றும் தெரிகிறது. இப்போது உள்நாட்டு மந்திரியாகவுள்ள சேர் ஒலிவர் குணதிலக, இங்கிலாந்திலே இலங்கையரசாங்கத்தின் ஹைகமிஷனாக நியமிக்கப்படுவார் என்றும் இப்போது அங்கே இலங்கை யரசாங்கப் பிரதிநிதியாயுள்ள மிஸ்ரர் ஜி. வி. எஸ். கொறியா ஆஸ்திரேலியாவுக்கு ஹைகமிஷனராக நியமிக்கப்படுவார் என்றும் சொல்லப்படுகிறது. சேர் ஒலிவர் அப்படி ஹைகமிஷனராக நியமிக்கப்பெற்றால் அவரிடத்துக்குஸ்ரீ அ. மகாதேவா செனேற்சபையில் நியமிக்கப்பட்டுப் பின் உள்நாட்டு மந்திரியாக்கப்படலாம் என்றும் சொல்லப்படுகிறது. திரு, மகாதேவாவின் விஷயம் ஓரளவுக்கு இன்னும் சந்தேக நிலைமையிலேயே இருக்கிறது ஆனல் அவர் உள்நாட்டு மந்திரியாக இருந்தகாலத்தில், மிஸரர் சேனநாயக்காவுக்கு உறுதுணையாக இருந்தார் என்பதனை இவ்விஷயத்தில் மிஸ்ரர் சேனநாயக்கா மறுப்பதற்கில்லை. ஆனல பொதுத் தேர்தல் ஒன்றில் படு தோல்வியடைந்த ஒருவரை இப்படிப் புறக்கதவால்வரவழைத்து அவர்கு அதிகார பதவி வழங்கல் ஜனநாயகத்தின்பாற்பட்டதா என்பது வேறுவிஷயம்

# நாவலர் பெருமான்

[யாழ்ப்பாணம் இந்து மகாசபையின் ஆதரவில் 4-12-47ல் நடந்த ஆறுமுகநாவலப் பெருமானின் குருபூசைத்தினத்தன்று ஸ்ரீமான் சி. நாகையா B. A. (Lond) அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்-]

சென்ற 500 வருடங்களிலும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரைப்போலத் தமிழுக்கும் சைவத்திற்கும் மன ஒருமையுடன் திறம்பட உழைத்தவர்கள் இல்லவேஇல்லை. இவர் சைவ சமயத்திற்குப் புத்துயிர் கொடுத்து இலங்கையிலும் இந்தியாவிலும் மறுபடியும் நிறுவி நிலவச்செய்த 5 ம் குரவர் பெருமான் என்பதில் வெட்டுணையும் ஐயமில்லை. சைவ மக்களாகிய நாமெல்லோரும் இவரை ஞாபகப்படுத்தும் இத்தினமாகிய திருநாளை பெருங்கொண்டாட்ட தினமாக்கி நம் பிற்சந்ததியாரை இவரைப்போலச் சனசங்க நற்சேவையில் ஈடுபடத் தூண்டுவது எங்கள் பெருங்கடனும் நம்நாடு உண்மையான நலன்பெற அஸ்திபாரமிட்டவர்கள் இவரைப்போல வேறொருவரு மில்லை யென்பது உண்மை!

இவர்செய்த பெருஞ் செய்கைகள் இத்துணைச் சிறப்புடையன வென்று இன்று நாம் முற்றுயறிதல் இலகுவல்ல. இற்றைக்கு சமார் 100 வருடங்களுக்கு முன் இவர் தோன்றிய அந்நாளில் எங்கள் நாடு என்னநிலையில் இருந்ததென்று ஒருவாறு சரித்திரமூலமாய் அறியலாமாயினும், முழுவதையு மறிந்துவிட முடியாது. சிங்களவரசுடன் புத்தசமயமும் தமிழரசுடன் சைவசமயமும் மாறிமாறிப் பரவியும் சுருங்கியும்கொண்டு பலநூற்றுண்டுகளாக நிலைகுலைந்த எங்கள் நாட்டுக்கு முதல் போர்த்துக்கீசரும் பின் ஒல்லாந்தரும் அதன்பின் ஆங்கில வாசருமாகிய ஐரோப்பியராளுகைக்குக்கீழ் ஏறக்குறைய 400 வருடகாலம் இடையீடில்லாமல் நலிந்துவந்த காரணத்தாலேற்பட்ட கஷ்டங்களோ மிகப்பல. நாங்களொருசமயத்தவராய் சாதியராய் அழிந்துவிடும் நிலையிலிருந்தோம். அமிழ்தினுமினிய எங்கள் பாஷை மூலை முடுக்குகளில் ஒதுங்கிப் பதுங்கிச் சில கயவர்பாற் றங்கி வருந்தியது எங்களுயிரினும் சிறந்ததும் ஒப்புயவற்றதுமாகிய சைவசமயம் தலைகாட்டினுற் றலைச்சேதம் நடக்குமென் றஞ்சியவர்போல் பட்டணமும், நாடும், வீடும் விட்டுக் கானகஞ்சென் றேங்கிக் கிடந்தது இப்படியே எங்கள் நாகரீகம், கலாசாரம், சமூகவாழ்வு ஆதிய எம் இலட்சியங்களெல்லாம் எம்மைவிட்டு ஒருங்கே விலகின. ஐரோப்பிய நாகரீகம் எங்களை விழுங்கியது. நிறத்திற் கறுப்பராயும் குணத்தி லடிமைகளாயு மிருந்ததைவிட மற்றவைகளிலெல்லம் ஐரோப்பியராயினேம். நடை, உடை, பாவனைகளும் உணவுப்பானமும் ஐரோப்பியருடையவாயின. மனப் பான்மையும் பண்பாடும் அவர்களுடையதாயிற்று விரும்பிக் கற்கும் பாஷையும் அவர்களுடையதாயிற்று. இனி என்னேயென்று நம்மவர் தங்களைக் கைவிட்டகாலத்தில் நல்லூரிலே கந்தவேளென உதித்தார் ஆறுமுகவள்ளல்.

இவர் தாஞ் செய்யவேண்டிய வேலையை முன்னறிந்தவர் போல் அதற்குத் தகுந்தவராகத் தம்மையாக்கச் சிறுவயதிலேயே தொடங்கிவிட்டார். தமிழிலும் வடமொழியிலும ஆங்கிலத்திலும் அதிகம் பாண்டித்தியமுடையவராய் மிகுந்த சீக்கிரத்தில் வந்தார். கிறிஸ்தவ பள்ளிக்கூடத்திற் படித்தும் படிப்பித்துக்கொண்டும் சிலகாலமிருந்தபடியால் கிறீஸ்தவர்களையும் கிறீஸ்த சமயத்தையும் நன்கறிந்திருந்தார். கிறிஸ்தவ வேதத்தையே தாம் படிப்பித்த பள்ளிக்கூடத் தலைவரான பாதிரியாரின் கேள்விக்கிசைந்து மொழிபெயர்த்தார். அது பாதிரியாருடன் நெருங்கிய சிநேகிதனுக்கியது மாத்திரமல்ல கிறீஸ்த சமயத்தின் நுண்பொரு

தொடர்ச்சி 4 ம் பக்கம்

# வரவு செலவுத் திட்டம்

## வடபகுதி விவசாயம்பற்றி விவாதம்

இலங்கை வரவுசெலவுத் திட்டம் சம்பந்தமான விபரத்தை ஒவ்வொன்ருகப் பாராளுமன்றத்துப் பிரதிநிதிகள்சபை ஆராய்ந்து வருகிறது. இதுவரை, எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த திருத்தம் ஒன்ருவது நிறைவேறப்படவில்லை. அரசாங்கக்கட்சியினர் தாம் பிடித்த முயலுக்கு மூன்றுகால் என்று தமக்குள்ள பலத்துடன் கருமம் ஆற்றி வரவுசெலவுத் திட்டத்தை நிறைவேற்றிவருகிருர்கள்.

விவசாயம் சம்பந்தமான செலவினங்கள் விவாதிக்கப்பட்டபோது, சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. வி. குமாரசுவாமி உட்படத் தமிழ் அங்கத்தவர்கள் வடமாகாணத்துக் குறைகள் சம்பந்தமாக எடுத்துரைத்தனர், இரணைமடுக்குளத்தை இன்னும் கூடிய பயனுள்ளதாகச் செய்ய வேண்டும், பூநகரியிலே குளம் ஒன்றைக் கட்டி அதன்மூலம் அந்தப்பகுதி விவசாயத்தை விருத்தி செய்யவேண்டும். நிலாவரை வற்றுத நீரூற்றைப் பயன்படுத்தவேண்டு மென்றெல்லாம் கேட்டனர். விவசாய மந்திரி மிஸ்ரர் டட்லி சேனநாயக்கா, வழ வழா, குழ குழா நியாயம் கூறி மழுப்பினர். அவர் கூறியதாவது:—

"வடமாகணத்து விவசாய நன்மையையிட்டு நாம் ஒன்றும் செய்யவில்லை என்ற அபவாதம் இப்போது மாத்திரமல்ல, ஸோல்பெரி விசாரணைக் குழுவினர் வந்தகாலத்திலும் கூறப்பட்டது. ஆனல் அந்த அபவாதத்துக்கு ஆதாரமேயில்லை என்று நாங்கள் நிரூபித்தோம், இந்த வரவு செலவுத் திட்டத்தில், யாழ்ப்பாணம் கடலேரியை நல்ல நீர் நிலையமாக்குதற்கு முயற்சிசெய்ய இடம் வைத்திருக்கிறேம். 20,000 ஏக்கர் நிலத்தைப் பண்படுத்தி விவசாயம் செய்ய ஓர் திட்டம் வகுதிருக்கிறேம் அத்திட்டத்தில் இரணைமடு விஷயமும் அடங்கியிருக்கிறது

"நிலாவரையின் வற்றாத நீரூற்றுச்

தொடர்ச்சி 4 ம் பக்கம்

கடிதம்

# தேசியத் தமிழர்!

## அவர்களுக்கோர் வேண்டுகோள்

இற்றைக்குச் சிலநாட்களுக்குமுன், கொழும்பிலே ஓர் சில தமிழ்மக்கள்கூடி, தேசியத்தமிழர் மகாநாடு என்ற ஓர் ஸ்தாபனத்தை உருவாக்கத் தீர்மானித்திருப்பதாக ஓர் செய்தி பிறந்திருக்கிறது. ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு வசதி என்பர்; அதே நிலைமையில் தமிழ்மக்கள் பரஸ்பரம் மாறுபட்ட அபிப்பிராயம்கொண்டு பரஸ்பரம் வேறுபாடுடைய ஸ்தாபனங்களை நிறுவிக்கொள்ளுதல் நல்லதல்ல என்பதே எனது அபிப்பிராயம். நாமோ சிறுபான்மையினர்: அப்படிப்பட்ட நாம், மூலைக்கொரு சங்கமும் முடுக்குக்கொரு ஸ்தாபனமும் வைத்துக்கொள்ளுதல் நல்லதல்ல. எல்லாரும் ஒரே ஸதாபனத்தின் கீழ் நின்று வேலைசெய்வோமானல் எம் சமூகத்தின் எதிர்காலம் சுபீட்சமாய் முடியும். அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் தான் தமிழ்மக்கள் பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்றிருக்கிறது என்பதைச் சென்ற பொதுத்தேர்தல் துலாம்பரமாகக் காட்டிவிட்டது. அதனை ஓர் சிலர் விரும்பினல் என்ன விட்டால் என்ன, பொதுஜன அபிப்பிராயத்துக்கு விரோதமாக நடத்தல் முறையல்ல என்பதனைத் "தேசீயத்தமிழர்"ஸ்தாபனம்அமைக்க முற்படுவோர்க்கு விநயத்துடன் தெரிவிக்க விரும்புகிறேன். தேசீயத்தமிழர் என்றதனல், அவர்களுடன் சேராத மற்றவர்கள் வகுப்புவாதிகளா? தமிழ்க் காங்கிரஸ் வகுப்புவாத ஸ்தாபனமா? வகுப்புவாதம் என்ருல் என்ன? அந்த இலக்கணத்தின்படி, தமிழ்க்காங்கிரஸ-வகுப்புவாத ஸ்தாபனமா? "நான் தமிழன்" என்று கூறுதல் வகுப்புவாதமா? மற்றும் சாகியத்தார் சமூகத்தாருடன் நாட்டின் பொதுநன்மை கருதி உழைக்க முற்படுதல் வகுப்புவாதமா? தமிழ்க் காங்கிரஸ் கேட்பது இதுதான்: தமிழ்மக்கள் ஓர் சமூகத்தாராக உஜ்ஜீவிக்க வேண்டும், எம் கலையை, எம் ஆசாரநுட்டானங்களைப் பாதுகாக்கவேண்டும். மற்றும் சமூகத்தார் சாதியாருடன் நாமும் ஒத்துழைக்கவே விரும்புகிறேம். அந்த ஒத்துழைப்பு, சமரசத்தை, சமத்துவத்தை. நேசபான்மையை ஆதாரமாகக் கொண்டிருக்கவேண்டும். ஆண்டானுக்கும் அடிமைக்கு மிடையில் உள்ள "ஒத்துழைப்பு" வேண்டியதில்லை. என்று தமிழ்க்காங்கிரஸ் கூறுவதுஅதன் "வகுப்புவாதத்தைக்" காட்டுகிறதா?

தமிழ்மக்களுக்கிடையே இனியும் பிரிவினை இருக்கவொண்ணுது. எமக்குள்ளே பூரண ஒற்றுமையிருக்கவேண்டும். தமிழர்க்கிடையே தேசியத்தமிழர், காங்கிரஸ் தமிழர், சிறுபான்மைத் தமிழர் என்ற பேதம் இனியும் இருக்கவொண்ணுது. எல்லாருமே தமிழர், அவர்களின் தனிப்பெரும் ஸ்தாபனம் தமிழ்க்காங்கிரஸ் என்று அதனைச் சேர்ந்து, அதனைப் பலப்படுத்தவேண்டும். இதுதான் நாம் உய்யும் வழி. எமக்கிடையே பூரணமான ஒற்றுமையிருக்குமானல், மற்றவர்கள் எம் ஒத்துழைப்பைக் கட்டாயம் நாடவேவேண்டும்: தமிழனை ஒதுக்கிவிட்டுத் தனி ராஜ்யம் நடாத்த, எந்தச் சாதியாராலும் இந்த இலங்கையில் முடியாது. இந்த உண்மையை நாம் ஒவ்வொருவரும் அகத்திட் கொண்டு கருமம் ஆற்றுவோமானல் தமிழ்மக்களின் இப்போதைய கேவல நிலைமை அகலும்காலம் தூரத்தில் இல்லை.

இன்று சிங்களருடன தமிழராகிய நாம் ஒத்துழைக்கவேண்டும் என்று தேசீயம் கூறுவோர் பலர் உண்டு. ஐக்கிய தேசீயக்கட்சியைச்சேர்ந்த பிமுகர் பலர் தான் இராச்சியபரிபாலனம் செய்கின்றனர். ஆனல், இவர்கள் தமிழ்மக்களின் நம்பிக்கையை-விசுவாசத்தைப் பெறுதற்கு என்ன கைங்கரியங்கள் செய்திருக்கின்றனர் என்பதை "இத்தேசீயத்தமிழர்" கூறுவாரா? தமிழர், சிங்களருடன் ஒத்துழைக்கவேண்டும் என்று கூறும் இத்தேசீயவாதிகள், இன்று அதிகாரம் வகித்துள்ளவர்கள் ஆற்றியுள்ள அநியாயங்களை அகற்றும்படி எப்போதாவது அவர்களுக்குப் புத்திமதி அல்லது ஆலோசனை கூறினரா? என்று கேட்கிறேன்.

விவசாயவிருத்தி விஷயம் ஒன்றை மாத்திரம் எடுத்துக்கொள்ளுவோம்; மிஸரர் சேனநாயக்கா தென்இலங்கையில் விவசாய விருததியின்பொருட்டுச் செய்துள்ள கைங்கரியத்தில் 1000 இல் ஒருபங்குதானும் இந்த வடமாகாணத்திற் செய்திருக்கிருரா? மின்னேரியாவில், பொலன்னறுவையில், காகமத்தில், அநுராதபுரத்தில், வீரவிலையில், நிடியகமத்தில், மினிப்பையில். கோடிக்கணக்கான ரூபாய்களை வீசிய மிஸரர் சேனநாயக்கா, இந்த வடமாகாணத்திலே என்ன செய்தார்? விவசாயப்பட்டாளம் என்ற ஒன்றை ஆக்கி, ஆயிரக்கணக்கான சிங்களர்க்குத் தொழிலும், விவசாயப்பயிற்சியும் தேடிக் கொடுத்து வருகிற மிஸரர் சேனநாயக்கா, தமிழ்மக்களும் அப்பட்டாளத்திற சேர எந்தவிதமான சௌகரியங்கள் செய்து வைத்தார்? தமிழ்மக்கள் அதிற் சேரக்கூடியதான சௌகரியம் ஒன்ருவது அதில் இல்லை எத்தனை குளங்களை விவசாய விருத்தியின் பொருட்டு இங்கே தோண்டுவித்தார். நிலமடைந்துள்ள எத்தனை குளங்களைத் திருத்துவித்தார்? இவற்றையெல்லாம் நம் தேசீயத் தமிழர் தெரிவிப்பார்களா? தமிழ்மக்களின் நம்பிக்கை

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவலர் பெருமான்

3-ம் பக்கத் தொடர்ச்சி

ங்களையும் அங்குள்ள அழுக்குகளையும் இவரறிய வசநிசெய்தது. இப்படியே பல காரணத்தாலும் எங்கள் சமயத்தை வெற்றிகொண்டு சென்ற கிறிஸ்தவ சமயத்தையும் அதன்சார்பாயெழுந்த ஐரோப்பியத்தையும் முறியடிக்கக்கூடிய பெலன்பெற்றார். முதலில் கிறிஸ்தவர் சைவசமயத்திற்கெதிராக விடுத்த ஒவ்வொரு துண்டுப் பிரசுரங்களுக்கும் தக்க சமாதானங்கள் முக்கியமாக விவிலிய வேதத்தி லிருந்தே காட்டி மறுத்தார். கிறீஸ்த சமயத்திலுள்ள குற்றங்களை யெடுத்தும் அவர்கள் தலைகுனியக்காட்டினர்.

துண்டுப் பிரசுரங்களின் மறுப்புக்கள் கிறிஸ்தவர்களுக்கு ஆத்திரத்தைப் பெருக்கின. அவர்கள் எழுத்தில்விட்டால் தக்க மறுப்புத் தடையின்றிப் பெறுமென்று கண்டு பட்டணத்தையும் பகிரங்கத்தையும்விட்டு நாட்டிலும் மூலை முடுக்குகளிலும் பிரசங்க வழியாகவும் இராசதந்திர முறைகளாலும் சைவசமயத்தையும் நாவலப்பெருமானவர்களையும் தாக்கத் தொடங்கினர். இதைக் கேள்வியுற்ற நாவலர் வண்ணார்பண்ணைச் சிவன்கோவில் வீதியில் சைவர்களெல்லோரையும் அழைத்துச் சைவசமய உண்மைகளை யெடுத்துப் போதித்ததுமல்லாமல் நல்லொழுக்கம் உலகத்தில் பரப்பக்கூடிய பிரசங்கங்களும் சோனாமாரியாகப் பொழிந்தார். கேட்டோர் கேட்க மேலும்அவாக்கொண்டனர் இடையிடையே கிறிஸ்தவர்களிட்டிய ஆட்சேபனைகளையும் மறுத்துச் சித்தாந்தங் காட்டியுந் திட்டுவர். தஞ் சமயத்தவர் செய்யுந் தவறுகளையும் எதிர் சொல்லமாட்டாதவாறு எடுத்துச் செவியறிவுறுத்துவர். இவைகளாற் சில பணக்காரர் அதிகாரவர்க்கத்தவர்களும் இவருக் கெதிராக நின்றனர்.

பாதிரிமாரும் அவர்களுடன் சேர்ந்து சைவசமயத்தை அழிக்கக் கங்கணங்கட்டிச் சம்பளம்பெற்ற போதகக் குழாங்களும் ஒருங்கே வீழக்கண்டும் இவர் விட்டிலர். சுயமத ஸ்தாபனஞ் செய்யுமுகத்தால் புத்தகங்களை அச்சிடுதல் பத்திரிகைகளை வெளியிடுதல் பள்ளிக்கூடங்கள் கட்டி நடத்துதல் ஆதியாம் ஆக்கவேலையில் தொடங்கினர். இந்நாளில் சைவசமய பரிபாலனஞ் செய்தோராகிய குருமார்முதலியோருள்ளும் சைவசமயத்திற்கடாத கொள்கைகளும் வெறும்அறியாமையும், ஆதாரமற்ற கிரியைகளும் மலிந்துபொலிந்து உண்மையூற் பொருள்கள்போல அபிமானிக்கப்பட்டு வருவதைக் கண்டார். சைவசமயத்திற்குள்ளே திருத்தங்கள் செய்பத் தொடங்கினர். பிற மதத்தவரிலும் பார்க்கப்பன் மடங்கான எதிர்ப்பை கிராகரித்து உண்மைக் கொள்கைகளையும் உண்மைக்கிரியைகளையும் சிவாகமரீதியாய்நிலைநிறுத்தினர்.

இவர் சொல்வது சரியென்று பலர் அறிந்து இவர் சொன்னபடி நடக்கத் தொடங்கினர்கள். ஒருசில ரறிந்திருந்தாரேனும் சாதி, பணம், வர்ணம், ஆதியவற்றால் தர்க்கித்துப் பின்றொடராது மூலைகளிலும் மறைவுகளிலும் வசையொழு கூறி இன்புற்றனர். இக்குணம் எங்குதான் இல்லை. எப்பொழுதுதானில்லை இவர் சிவபதமடைந்த இந்நற்றினத்தை அகிலத் தமிழ்நாடெங்ஙனும் அகிலச் சைவராடெங்கணும் மிகவனப்புடன் கொண்டாடச்செய்யவேண்டும். இதைவிட எங்கள் சாதியாரின் உயிரின் சொரூபத்தை எங்கள் சமயத்தாரின் உயிரின் சொரூபத்தைப் பாதுகாக்கிற ஆக்கவேலை வேறொன்றுமில்லையெனலாம்.

நாவலர்செய்தநூல்கள் பலப்பல. திருவருள்காட்ட இவர்கண்டு அறிவிலிகளாகிய எங்களுக்குச் சொல்லிவைத்த சில நூல்களுண்டு. அவைகள் சாதாரண நூல்களைப் போலவல்ல, வினையில் நீங்கிய பதிவாக்குப்போன்ற உறுதிமொழிகள்; வேதசிவாகமப் பெருங்கடலில் எங்களுக்கெனத் திரட்டப்பெற்றவெண்ணெக்கட்டிகதி, அமுதகலசங்களென்றாலும்மிகையாகாது. அவைகளை நம்போன்றவர் படித்தறிந்தாலேஎங்களுக்குப் போதும் வேதசிவாகமப் பொருள் முழுவதையுமறிந்துவிட்டதற்குச் சரியாயிருக்கும். இது நிச்சயம்.

## வியாபாரத்திற்கழகு விளம்பரஞ் செய்தல்

## திருச்சி ரேடியோ

புதன் டிசம்பர் 24

காலை 7 15 தோரம்பம் இசைத்தட்டு 7 20 தமிழில் செய்திகள் 7 30 எம் எஸ நடராசபாகவதர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலைஇசை இசைத்தட்டு 8 30 வி சங்கரசிவம் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 எம் எஸ நடராசபாகவதர் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 எம் எஸ நடராசபாகவதர் பாட்டு 2 15 கல்விஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 கிறிஸ்துமஸ தேவாராதனை 5 30 வாத்ய கதம்பம் 5 40 இசைப்பயிற்சி 6ஆங்கிலத்தில செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் இசைத்தட்டு 7 15 காப்பி ஹோட்டல் 7 30 தமிழில் செய்திகள் 7 45 புதிய வெளியீடுகள் இசைத்தட்டு 8 விஷக்கிண்ணம் நாடகம் 8 30 இசைவிழா 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 ஆங்கிலப் பேச்சு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 இசைவிழா 10 30 முடிவு.

வியாழன் டிசம்பர் 25

காலை 7 15 தோரம்பம் இசைத்தட்டு 7 20 தமிழில் செய்திகள் 7 30 கண்டதேவி எஸ் திருவேங்கடம் ஐயங்கார் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலைஇசை இசைத்தட்டு 8 30 கும்பகோணம் என் ஆத்மநாதன் பாட்டு 9 முடிவு

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பெண்ணுலகம் 2 தமிழில் செய்திகள் 2 05 குரல்வகை இசைத்தட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 கிருஸ்துமஸ் தேவாராதனை 5 30 வாத்யகதம்பம் இசைத்தட்டு 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் இசைத்தட்டு 7 15 காப்பி ஹோட்டல் 7 30 தமிழில் செய்திகள் 7 45 கண்டதேவி எஸ் திருவேங்கடம் ஐயங்கார் பாட்டு 8 15 ராகம் தாளம் பல்லவி 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 இசைவிழா 10 30 முடிவு.

வெள்ளி டிசம்பர் 26

காலை 7 15 தோரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 ஆரணி ஒ பி ஷண்முகம் செட்டி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 திருச்சி வாத்யகோஷ்டி 8 30 பி கே கலிபுல்லா பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40ஆரணி ஒ பி ஷண்முகஞ்செட்டி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05ஆரணி ஒ பி ஷண்முகம்செட்டி பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5 திருப்பாம்புரம் சோமசுந்தரம் சகோதரர்கள் நாகஸ்வரம் 5 40 குரான் ஷரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 திருப்பாம்புரம் சகோதரர்கள் நாகஸ்வரம் 7 30 தமிழில் செய்திகள் 7 45 காப்பி ஹோட்டல் தேவையா? 8 இசைவிழா 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 நாட்டுப் பாடல்கள் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 இசைவிழா 10 30 முடிவு.

## சைவப் பிரசங்கம்

ஊரைநகர் கருங்காலிச் சுப்பிரமணியசுவாமி ஆலயத்தில்விருதைமுத் தமிழ்ப் புலவர் திரு. ச. கண்ணன் அடிகள் அவர்கள் வருகிற வியாழக்கிழமை (25-12-47) இரவு 8 மணியளவில் 'சமயமும் சம்பந்தரும்' என்னும் பொருள்பற்றியும் அத்தியட்சர் 'ஆலயமும் சைவ நம்மக்களும்' என்னும் பொருள்பற்றியும் விரிவுரை நிகழ்த்துவார்கள்.

## தேசீயத் தமிழர்

3ம் பக்கத் தொடர்ச்சி

யைப் பெறுவதற்கு, அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்தும்படி இத்தேசீயத்தமிழர் எப்போதாவது மிஸ்டர் சேனநாயக்காவைக் கேட்டனரா? மிஸ்டர் சேனநாயக்காவும் அவருடைய கோஷ்டியினரும் தென் இலங்கையில் அநேக நன்மைகள் செய்திருக்கின்றனர் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், இதுவரை வடபகுதி மக்களை முற்றாகப் புறக்கணித்தேயிருந்திருக்கின்றனர் என்பதையும் மறுக்க முடியாது இதனைத் தேசீயத் தமிழர் நன்கு உணரவேண்டும்; இப்படிப் புறக்கணித்தமையே, தமிழ்ப் பொதுஜனங்களுக்கு ஆத்திரத்தையூட்டியது. அப்படிப் புறக்கணித்ததுதான், தமிழ்க் காங்கிரசிற்கு முன்னொருபோதுமில்லாத பலத்தைக் கொடுத்தது. அந்தப் பலத்தைத் தேசீயத்தமிழர் இச்சந்தர்ப்பத்திற் கெடுக்க முனைவது புத்தியல்ல.

இங்ஙனம்
ஓர் தமிழன்

## இலங்கை இந்திய உறவு

முதலாம் பக்கத் தொடர்ச்சி

தின் ஹைகமிஷனராகவுள்ள ஸ்ரீ ஜுத் வி. வி. கிரியும், இவ்விஷயமாக இப்போது புதுடெல்கிக்குப் போயிருக்கிறார். இலங்கை-இந்திய சம்பந்தமான பேச்சுக்களில் அவரும் பங்கெடுத்து உதவி செய்வார்.

அஸோஸியேற்றட் செய்தி ஸ்தாபனத்து நிருபர் ஒருவர் ஸ்ரீ ஜுத் கிரியை இவ்விஷயமாகக் கண்டு சம்பாஷித்தபோது அவர் பின்வருமாறு கூறினார்.

"இலங்கை இந்தியப் பிரச்னையை முடிவு செய்வதற்கு இதுதான் உகந்த காலம். இரண்டு நாடுகளும் இப்போது சுதந்திரம் பெற்று இருப்பதால், அந்நியர் தலையீடின்றியே, தம் பிரச்சினைகளை அவை தீர்க்கச் சுலபமாயிருக்கும். இருபக்கமும் போதிய நல்லெண்ணமும், இந்தப் பிரச்சினையைச் சமரசமாகத் தீர்க்க வேண்டுமென்ற அவாவும் இருக்கின்றன. இது சம்பந்தமாக ஓர் விஷயம் இப்போதுதெள்ளத்தெளிய வெளிவந்திருக்கிறது. அதாவது இலங்கையில் வசிக்கும் இந்தியர் இரண்டு நாடுகளிலும் பிரஜாவுரிமை பெற விரும்பவில்லை, விரும்பவும் முடியாது என்பதே அது. ஓர் சமரசம் ஏற்பட்டுவிட்டால், இவர்களிலே குறிக்கப்பட்ட ஓர் காலம் சீவித்த இந்தியர், தாம் இந்தியப் பிரஜைகளாக இருப்பதோ அல்லது இலங்கைப் பிரஜைகளாக இருப்பதோ என்பது பற்றி ஒளிப்பு மறைப்பின்றி உறுதிப் பண்ணிக்கொள்ள வேண்டும்."

## பொல்லாத காலம்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

வால் மேலாகவும் இருப்பது உலகத்தின் எதிர்கால சுபிட்சத்துக்கு உற்பாதமாயில்லை. எல்லாம் தலைகீழாகவே நடக்கும் என்று அஞ்சவேண்டியிருக்கிறது. அதுமாத்திரமல்ல: புரட்சி, கலகம், எரிமலைவிபத்து, பஞ்சம் முதலியஎல்லாத்தீமைகளும்கூடியசீக்கிரத்தில் ஏற்படுவதற்கு இந்த வால்வெள்ளித் தோற்றம் ஓர உற்பாதமாகும்.

சந்திர நட்சத்திரத்துக்குக் கிழக்கே இந்த வால்வெள்ளி தோற்றியிருக்கிறது. இது உலகின் பெண்ணினத்துக்குச் சொல்லொணாத் தீமைகள் விளைக்க ஏதுவாயிருக்கும்; விவாக நீக்கங்கள், பெண்சோரம், தம்பதிகளுக் கிடையேபிரிவினை, என்பன மலியும். இதன் பயனாக, வியாபாரிகள் அதிகலாபம் சம்பாதித்துக் கொள்ள சந்தர்ப்பத்தைப் படைக்கலாம்.

## விசாரணைச்சபை நியமனம்

### வரவு செலவுத் திட்ட இரகசியம்

வரவுசெலவுத் திட்டம் பாராளு மன்றத்திற் சமர்ப்பிக்கப்படு முன் அதில் உள்ள சில விஷயங்கள் பகிரங்கமாகிவிட்டன என்ற ஓர் அபவாதம் சுமத்தப்பட்டிருக்கிறது. இந்தக் குற்றச்சாட்டு எவ்வளவு சாரம் உண்மை? வரவு செலவுத்திட்ட அம்சங்கள் பகிரங்கமானது உண்மைஎன்றால் அவை எப்படிப் பகிரங்கமாயின? என்னும் இன்னோரன்னவற்றைப்பற்றி விசாரணைபுரிந்து அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க ஓர் விசாரணைச்சபையை நியமிக்க மந்திரிசபை தீர்மானித்திருக்கிறது இதற்கான அறிவித்தல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

குறித்த விசாரணைச்சபையில் மிஸ்டர் ஜே. ஏ. மார்ட்டினஸ், மிஸ்டர் ஏ. எல். பீரிஸ், ஸ்ரீ எஸ். ஜே. வி. செல்வநாயகம் என்பவர்கள் அங்கத்தவராயிருப்பர். மிஸ்டர் மார்ட்டினஸ் சபைத தலைவராயிருப்பர்.

## வரவுசெலவுத் திட்டம்

3-ம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தமாகச் சொல்லுகில், அந்த நீரூற்றின்மூலம் ஆகக்கூடியதாக 200 ஏககர் நிலத்துக்குமாத்திரமே நீர்ப்பாய்ச்சலாம். அந்த நீரூற்றுத் தண்ணீரை மேலே இழுப்பதற்குப் பெரிய குழாய்கள் உபயோகித்தால் உப்புநீர் மேலே வந்துவிடும் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே சிறிய யந்திரங்கள் மூலமாகவே தண்ணீரை இறைக்கவேண்டும்."

யாழ்ப்பாண விவசாயிகள் விஷயமாக மிஸ்டர் டி. எஸ் சேனநாயக்காவும் (பிரதமர்) பின்வருமாறு வரவு செலவுத் திட்ட விவாதத்திற் குறிப்பிட்டார்.

"தாணையடுத்திட்டம் ஈடேறுமற் போனதற்குப் பல காரணங்கள் உண்டு. யாழ்ப்பாண விவசாயி மிகவும் முயற்சியுடையவன். ஆனால், அந்த விவசாயியின் உழைப்பு முழுவதையும் பிரயாசை முழுவதையும் பங்கப்படுத்துபவர், அவ்விவசாயியின் சொந்த மனுஷன்தான். ஓர் ஏக்கருக்கு 100 ரூபா குத்தகை நிலச் சொந்தக்காரருக்குக் கொடுத்தால், விவசாயி எப்படி ஈடேறமுடியும்? யாழ்ப்பாண விவசாயிகளின் இரத்தத்தை உறிஞ்சுபவர், அவனுடைய சொந்தமனுஷரன்றி மற்றவர்கள் அல்ல"

## நாம் யார்?

1ம்பக்கத் தொடர்ச்சி

நிகழும்குறைகள் நம்நாட்டிலும் ஆங்காங்கு நிகழ்ந்துகொண்டே இருக்கும் இதற்காக ஆலயங்களையும் அவற்றிற் கலைகளை வளர்க்க அமைத்த நோக்கத்தையும் பழிப்பது அறிவின் செயலாமா? ஒழிந்தவைகளை மறுவலும் வரவேற்கவேண்டும் என்ற நோக்கத்தால் நாம் இது பேசவில்லை. குற்றம் எங்கேயோ இருக்க யார்மேலேயோ ஏற்றுகின்றோமே. அதற்காகத்தான் இவ்வளவும் சொல்கிறோம்.

ஆலயத்தில் மூர்த்தி ஒன்றாக இல்லாமைக்கு ஒருகாரணம் உண்டு; ஒன்றே தெய்வம் என்ற உணர்ச்சி எல்லார்க்கும் எளிதில் வருவதில்லை. அவரவர் மனப்பண்புக்கு ஏற்பத் தெய்வத் திருவுருவம் அவர் உள்ளத்தைக் கவரத்தக்க குணங்குறிகள் இருப்பது போல விளங்கவேண்டும் என்ற கருத்தாலேயே உருவவழிபாடு பலவகையாயிற்று. வழிபாட்டுக்கு வழிகாட்ட ஒரு குருக்கள் ஏனோ! நாமே நேரில் போய் அந்த மூர்த்தியைப் பார்த்துவிட்டு வரலாகாதோ என்று கேட்கலாம்.

(வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதர்

## ம. வே. திருஞானசம்பந்தப் பிள்ளையின்

# அறுபதாம் ஆ. நிறைவு விழா நிதி

நமது பண்டிதரவர்களின் சஷ்டியப்த பூர்த்தி விழாவை, வருகிற மார்கழி மீ ௧௨௳ (27-12-47) சனிக்கிழமை திருவருளை முன்னிட்டு நடத்தநிச்சயித்திருப்பதால், அத்தேதிக்கு முந்தியே மேற்படி பண்டிதரவர்களின் மாணாக்கர்கள் அபிமானிகளாயுள்ள யாவரும் இந்நிதியின் பொருட்டுத் தம்மால் இயன்றபணம் உதவுக. மேலும் பணம் உதவும் அன்பர்கள் தம்பெயர் விலாசமென்னு மிவைகளைத் தெளிவாக எழுதி, திரு. S. P. கந்தையா அவர்கள் மேற்படி நிதித் தனாதிகாரி, இந்துசாதனாலயம், வண்ணார்பண்ணை என்னும் விலாசத்திற்கு அனுப்புக. பணமுதவுவோரின் பெயர், விலாசம், பணத்தொகை முதலியன இந்துசாதனத்தில் வெளிவரும்,

☞ மேற்படி விழா நிகழ்ச்சிப்போது அபிமானிகளனைவரையும் தவறாது சமுகஞ்செய்து விழாவைச் சிறப்பிக்கும்வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

| திருவாளர்கள்: | ரூ. ச. |
|---|---|
| முன் கணக்குப்படி | 1425 00 |
| ம. ஸ்ரீகந்தா அவர்கள். உதவி மாகாணத்தலைவர் யாழ்ப்பாணம் | 25 00 |
| K. சச்சிதானந்தன், சாவகச்சேரி | 5 00 |
| * A. இளையதம்பி உரும்பராய் | 2 00 |
| | 1457 00 |

* இவருடைய கணக்கில் 5 ரூபா என வெளியிடவேண்டிய தொகை தவறுதலாக 3 ரூபாவென முந்திய பத்திரிகையில் வெளிவந்துவிட்டது

கா. கந்தையா,
தலைவர்.

க. சி. சுப்பிரமணியம்,
காரியதரிசி.

ஷை பண்டிதரின் சஷ்டியப்தபூர்த்திச் சபை, வண்ணார்பண்ணை

## எந்தவித உறவு

## இலங்கைக்கும் இந்தியாவுக்கு மிடையில் வேண்டும்

இந்தியா இலங்கை உறவுகள்பற்றி அகிலஇந்தியக் காங்கிரஸ்கமிட்டிக்கு ஸ்ரீ பி. ஆர். ராமச்சந்திரராவ் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் இலங்கையுடன் இந்தியாவின் உறவுகள் நெருங்கிய தொடர்பு உடையதாகவும் நிரந்தரமானதாகவு மிருக்கவேண்டுமெனகிறார்.

இந்தியா பாகிஸ்தான் இவையன்றி இலங்கை, பர்மா, மலாய் இவை சுதந்திரமடைவது நிச்சயம்: ஆசியாவில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் மறைவதுடன் இந்தியா, இலங்கை, பர்மா, மலாய் இவற்றின் 'கூட்டு சமஷ்டி' அவசியமாகிறது. இந்தியாவின் பூகோள நிலைமையையும் அதனுடைய அளவற்ற வளங்களையும் கவனித்தால் இந்து மஹாசமுத்திர பிரதேசத்தல் இந்தியாவே தலைமை வகிக்கவேண்டும்.

இந்த திருஷ்டியுடனேயே இந்தியா - இலங்கை பிரச்னைக்கு பரிகாரம் தேடவேண்டும். இலங்கையர் பௌத்தர்களாகையால் அவர்களுக்கு இந்தியாவே 'மெக்கா' வாகும், இந்தியா இலங்கை முதலிய இந்துமஹா சமுத்திர பிரதேச நாடுகள் ஐக்கியப்படவேண்டுமென்ற புதிய சித்தாந்தத்தின் அடிப்படையில் இலங்கை இந்தியர் பிரஜா உரிமை முதலிய பிரச்னைகளுக்குப் பரிகாரம் தேடவேண்டும், இலங்கை இந்தியர் ஆசுரயிப்பாளரல்ல; பங்காளிகள் போலவே நடத்தப்படவேண்டியவர்கள்.

## கைதடி வடக்கு இந்து கலாபிவிருத்திச் சங்கம்

நிகழும் 1947-ம் ஆண்டு மார்கழி மாதம் 27-ம திகதி சனிக்கிழமை மாலை 6 மணி 30 நிமிஷமளவில் பிரம்மஸ்ரீ கே கே யோகானந்தேஸ்வரக் குருக்கள் அவர்களின் தலைமையின் கீழ் மேற்படி வாசிகசாலை ஸ்ரீமாந். செ. சுப்பிரமணியம் அவர்களால் திறந்து வைக்கப்படும்.

## வடஇலங்கைத் தீவக சமாஜம்

கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை (14-12-47) மாலை 3. 30 மணியளவில் அட்வகேற் திரு. தில்லைநாதன் அவர்களின் தலைமையில் கூடிய வட - இலங்கை தீவக மக்களின் மா நாட்டில் வட - இலங்கைத் தீவக சமாசம் என்னும் பொது ஸ்தாபனம் ஸ்தாபிதமாயிற்று

மண்டபத்தில் தீவகமக்கள் ஏராளமாய்க் குழுமியிருந்தனர்.

அவ்வமயம் சமாச வரவேற்புக் கழகத் தலைவர் திரு, வ நவரெத்தினம் ஆங்கு குழுமியிருந்த பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசுகையில். "வட - இலங்கையின் தீவக மக்கள் யாவரையும் ஒற்றுமைப்படுத்தி, அவர்களின் சமூக நலம், பொருளாதார அபிவிருத்தி, அறிவாக்கம் என்னும் நலன்களை மேலோங்கச் செய்து பொதுசன ஊழியத்தில் ஈடுபடுவதே இச்சமாசத்தின் நோக்கங்களெனவும், சமாசம் அரசியல் விஷயத்தில் ஈடுபடாதென்றும், இச்சமாசத்தை எவராவது தமது சுயநலக் காரியங்களுக்கு உபயோகப்படுத்த இடங் கொடாதென்றுங் குறிப்பிட்டார்.

மகாநாடு முடிவில் பார்லிமென்றில் தீவகங்களின் பிரதிநிதியாகிய திரு. A. L. தம்பிஐயா அவர்கள் சமாசத்தின் ஸ்தாபன கர்த்தாக்களின் முயற்சியை மெச்சியும் சமாசம் நெடுங்காலம் மேலோங்கி வளர்ந்து பொதுசன சேவையில் மேம்பாடுறுக என ஆசி கூறினார். இதன்பின் சமாசக் காரியக கழகத்தினர் தெரிவுசெய்யப்பட்டனர்.

நாளை 23-ந் திகதி தொடக்கம ஜனவரிமாதம் 3-ம் திகதிவரைக்கும், நத்தார் விடுதலைக்காக அரசாங்க உத்தியோகத்தர்க்கு உதவப்படும். ஜனவரிமாதம் 3-ம் திகதியன்றுதான் அரசாங்கக் காரியாலயங்கள் விடுதலைக்குப்பின் கருமம் ஆற்றும்.

நாளைத்தினம் (புதன்கிழமை) கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையே விமானப் போக்குவரத்து மூன்றுமுறை நிகழும். நத்தார் விடுதலையின் பொருட்டு யாழ்ப்பாணம் வரும் உத்தியோகத்தர்க்குச் சௌகரியமாயிருப்பதற்கே இந்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

# ஆயுர்வேத வைத்தியம்

## விசாரணைச் சபை அறிக்கை

இலங்கையிலே சுதேச வைத்திய முறைகளாகிய ஆயுர்வேதம், சித்தம், யூநானி என்பவற்றுக்கான கல்வியை எவ்வாறு சீர்திருத்தியமைக்கலாம் என்பதனை விசாரணை புரிந்து ஓர் அறிக்கை விடுமாறு 1946ம் ஆண்டிலே ஓர் விசாரணைச்சபை நியமிக்கப்பட்டது. கவிராஜ் டக்டர் எம். எல். தாஸ் குப்தா அதன் தலைவராகவும், திருவாளர்கள் பீ. டீ. எஸ். குலரத்தின, சு. நடேசன், ஜீ பீ. விக்கிரம ஆராய்ச்சி என்பவர்கள் அங்கத்தவர்களாகவும் அச் சபையில் இருந்தனர்.

இந்த வைத்திய விசாரணைச்சபை இப்போது தனது அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. ஆயுர்வேத வைத்திய முறையிற் கல்விபயிற்றக் கொழும்பில் ஓர் கல்லூரியும், சித்த வைத்திய முறையிற் கல்விபயிற்ற யாழ்ப்பாணத்தில் ஓர் கல்லூரியும நிறுவவேண்டுமென்று ஷை விசாரணைச்சபை தனது அறிக்கையில் ஆலோசனை கூறியிருக்கிறது. அந்த அறிக்கையிற் காணப்படும ஆலோசனைகளிற் பிரதானமானவை வருமாறு:

யூநானி வைத்தியம் கற்க விரும்புவோர் இந்தியாவுக்குச் சென்று அங்கே அந்த வைத்தியமுறையைப் பயில, அவர்களுக்கு வசதியளிக்கப்படல் வேண்டும. முஸ்லீம் மாணவர்கள் ஆயுர்வேத வைத்தியம் பயில, அவர்களுக்கு வசதியளிக்கப்படல் வேண்டும. முஸ்லீம் மாணவர்கள் ஆயுர்வேதவைத்தியம் பயில விரும்பினல், கொழும்புக் கல்லூரியிலும், சித்தவைத்தியத்தில் தேர்ச்சிபெற விரும்பினல் யாழ்ப்பாணக்கல்லூரியிலும் அவர்களுக்குப் போதிய வசதிகள் வழங்கப்படல் வேண்டும்

யாழ்ப்பாணக் கல்லூரியிலாக, கொழும்புக் கல்லூரியிலாக, சேர்ந்து படிக்க விரும்பும மாணவர்களின் தராதரம உயர்த்தப்படல் வேண்டும். ஓர் பரீட்சை வைத்து, அதிற் சித்தியடைந்தவர்களையே ஷை இருகலாசாலைகளிலும் சேர்க்கவேண்டும. கலாசாலைப் பயிற்சி 5 வருஷ காலத்துக்கு இருக்கவேண்டும். அதன்பின் ஓர் 6 மாதகாலத்துக்கு இதற்கெனவுள்ள ஆஸ்பத்திரியில் மேலும பயிற்சியும் அநுபவமும் பெறுதல்வேண்டும், ஆயுர்வேதம், சித்தவைத்தியம், நவீன வைத்திய சாஸ்திர முறைகள் என்னும இவற்றில் மாணவர்களுக்குப் போதனை அளிக்கப்படல்வேண்டும். அத்துடன் சாதாரண சத்திரசிகிச்சை, பிரசவ வைத்தியம் என்பனவும் போதிக்கப்படவேண்டும். தகுதியான, திறமைவாய்ந்த ஆசிரியர்களைக்கொண்டு ஒவ்வொரு பாடமும் சரியானபடி அமைத்துப் படிப்பிக்கப்படல் வேண்டும்.

5 வருஷ காலத்துக்குள்ளும் 4 பரீட்சைகள் நடத்தவேண்டும். கடைசிப்பரீட்சையில் தேறி 6 மாத அநுபவப்பயிற்சி பெற்றபின், வைத்திய பூஷணம் என்ற பட்டம் வழங்கப்படல் வேண்டும், அதற்குப்பின அநுபவம்பெற்று வைத்திய முறையில் விசேஷ ஆராய்ச்சியில் ஈடுபட்டு நிபுணர்களானல் அவர்களுக்கு "வைத்திய சிரோமணி" "வைத்திய விஷாரதா" என்ற பட்டங்கள் வழங்கப்படல் வேண்டும்

குறித்த இரண்டு கல்லூரிகளிலும் சிறந்த நூல் நிலையங்கள் ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும். தகுதிவாய்ந்த மாணவர்களை ஊக்கப்படுத்த அவர்களுக்கு உபகாரவேதனம் அளிக்கப்படல் வேண்டும். கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் படிக்கும் மாணவர்கள் தங்கியிருந்து படிக்கத்தக்க விடுதிகள் அமைக்கவேண்டும். இக்கல்லூரிகளிற் படிக்கும் மாணவர்களுக்கு, சிங்களத்திலும் தமிழிலும் பாடப்புத்தகங்கள் இயற்றப்படவேண்டும். இதன்பொருட்டுப் பாடப்புத்தகச்சபை ஒன்றை ஏற்படுத்தவேண்டும்,

600 நோயாளிகள் இருந்து சிகிச்சைபெறக் கூடியதாயும 1000 நோயாளிகள் வெளியிலிருந்துவந்து மருந்து பெற்றுக்கொண்டு போகக்கூடியதாயுமுள்ள சிறந்த ஆஸ்பத்திரி ஒன்று கொழும்பில் நிறுவப்படல் வேண்டும். அதில் எல்லாவிதமான நவீன சாதனங்களும் இருத்தல் வேண்டும. இந்த ஆஸ்பத்திரியிலே ஆயுர்வேத முறையில மாணவர்கள் பயிற்சிபெறவும, நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கவும் வசதிகள் ஏற்படுத்துதல் வேண்டும். இதுபோன்ற ஆஸ்பத்திரி ஒன்று யாழ்ப்பாணத்திலும, சிறிதாக அமைக்கப்படவேண்டும்; இலங்கையெங்கணும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் நிறுவப்படல்வேண்டும. அவற்றில், தக்க திறமைவாய்ந்த ஆயுர்வேத வைத்தியர் நியமனம செய்யப்படவேண்டும்; யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் ஸ்தாபிக்கப்படும ஆயுர்வேத ஆஸ்பத்திரிகளைப் பொதுஜனங்கள் அபிமானித்தால், வேறும் பாகங்களிலும் அவைபோன்ற ஆஸ்பத்திரிகளை நிறுவுதல் வேண்டும்.

இப்போதுள்ள தகுதிவாய்ந்த ஆயுர்வேத வைத்தியர் அனைவரையும் பதிவு செய்தல்வேண்டும். ஓர் மத்திய ஆயுர்வேத மருந்துச்சாலை ஸ்தாபிக்கப்படல்வேண்டும். இந்த மருந்துச்சாலையிலிருந்தே தேவையான ஆயுர்வேத அவுஷதங்களும தைலங்களும் விநியோகிக்கப்படுதல் வேண்டும்; ஆயுர்வேத அவுஷதங்களும எண்ணெய்வகைகளும் மற்றவர்களால் விநியோகிக்கப்படுதல் கட்டுப்படுத்தப்படல்வேண்டும்


## மலேயாவுக்குக் கப்பல் பிரயாணம்

சென்னபட்டணம் மார்க்கம் செல்வதற்கு வசதிகள் ஆரம்பமாகிவிட்டது
யாழ்ப்பாணம் சென்னபட்டணம், பிறுங் ரூபா 170
(றெயில் 3-ம வகுப்பு சப்பல் டேக்)
நாகபட்டணம் மார்க்கம் செல்வோர் ரூபா 115
**வசதிகள் முன்போற் குறைவின்றிப்பெற்றுக்கொள்ளலாம்**
விபரம் நேரில்:

**எஸ். ஆர். எஸ். நாதன்**

21/3, ஸ்ரான்லி றேட் :: யாழ்ப்பாணம்
(வின்சர் — வெலிங்டன் படமாளிகைகளின் மத்தியில்)
கிளைஸ்தாபனங்கள்: சென்னபட்டணம் நாகபட்டணம்
Std 22. 6-6-47—6-6.48


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவருட்பயன்

சைவத்திருவாளர் சு. சிவபாதசுந்தரம் அவர்கள் (B.A.)

இயற்றிய விரிவுரையோடு கூடியது. தமிழ் ஆங்கில
எஸ். எஸ். ஸீ. வகுப்புகளுக்குச் சமய பாடமாக
விதிக்கப்பட்டது. புதுக்கிய பதிப்பு

விலை சதம் 75 ( அஹ 12 )

**திருக்குறள்** முதல் 20 அதிகாரம்

பதவுரை, கருத்துரை, விசேடவுரை ஆங்கில மொழி
பெயர்ப்பு, நூலாசிரியர் வரலாறு என்னுமிவற்றுடன்

விலைசதம் 75 (அஹ 12)

யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலையிலும்,
பிரபல புத்தகசாலைகளிலும் பெறலாகும்

மனேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

# இலக்கிய வாசகம்

மூன்றாம் புத்தகம்

நான்காந்தரத்துப் பிள்ளைகட்கு உபபாடமாகவுள்ளது
(புதுக்கிய இரண்டாம் பதிப்பு)

**இதன் வசனபாகம்**
*சத்தியவிரதம்பூண்ட அரிச்சந்திரமகாராசனுடைய வரலாறு இலகுவான இனிய செந்தமிழ்வசனநடையில் 18பாடங்களாக வகுத்தெழுப்பட்டுளது*

**செய்யுட் பாகம்**
*பஞ்சதந்திரத்தில் காக்கை ஒட்டகத்தை வஞ்சித்த கதைச்செய்யுள் நீதிக் கவித் திரட்டு, சதகத் திரட்டு என்னு மிவைகள் அடங்கி யுள்ளன.*

பிரதியின் ஈற்றில் அரும்பத விளக்கம், செய்யுட்
பாடவுரை என்னுமிவைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

பிரதி ஒன்று விலை சதம் 60 (அஹ 10)

இங்குள்ள பிரபல புத்தகசாலைகளிலும் பெறற்பாலன

மனேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை
யாழ்ப்பாணம்

திரு. வே. சிவக்கொழுந்து
அவர்களியற்றிய

# பிரதமவகுப்பு நூல்கள்

1 நாலாந்தரப் பூமிசாத்திரம் ( 7-ம் பதிப்பு ) விலை சதம் 80
2 ஐந்தாந்தரப் பூமிசாஸ்திரம் ( 5-ம் பதிப்பு ) விலை ரூபா 1
3 நாலாந்தரக் கணிதம் (புதிய பதிப்பு) விலை ரூபா 1 35
4 ஐந்தாந்தரக் கணிதம் (புதிய பதிப்பு) விலை ரூபா 1 50
5 இரண்டாம மூன்றாந்தரக் கணிதங்கள் ( அச்சில் )
விரைவில் வெளிவரும்

☞ புதியபாடத்திட்டத்துக்கு அமைய எழுதப்பெற்ற மேற்படி நூல்கள் ஆங்கில பாடசாலைகளில்கல்விபயிலும் தமிழ்ச்சிறுர்களுக்கும் உகந்தபாடப்புத்தகங்களாகும்.

வட இலங்கா புத்தகசாலை
பெரியதெரு, பருத்தித்துறை

## கந்தசாமி வைத்தியர் அமிர்த சர்க்கரை லேகியம்

*தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதிூ இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற் புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பணிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.*

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் காற் கழஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்

**கால் ரூத்தல் விலை ரூபா 5-00**

வி. பீ. பி. யில் அனுப்புவோம்.

விலாசம் :

ஆயுள்வேத சிவசோதி மெடிக்கல்ஹோல்
— வல்வெட்டித்துறை —

Std .5 1-7-47—30-6 48 (செ)

## பசந்த லேகியம

*இதனல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.*

*ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும்தீர்ந்து, தேகத்துக்குப்பலம், உண்டாக்கும்*

ஒருரூத்தல் விலை ரூபா 25
அரைரூத்தலுக்கு ரூபா 12-50
கால்ரூத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறு[illegible]
கீ. 156, செக்கடி[illegible] கொழும்பு,

Std. 1. 26—3—47 to 1—4—48

# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி
சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

## இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

**தலைமைக்காரியாலயம்:-** பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.

**நியுயோர்க் ஏஜெண்டுகள்:-** ஏர்விங் ட்ரஸ்ற் கம்பனி.

**லண்டன் ஏஜெண்டுகள்:-** பார்க்கினேஸ வங்கி.

**கிளைக்காரியாலயங்கள்:-** புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்), வதுளை

**யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:-** 242, ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள்
இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
*இலங்கையில் (திருக்கோணமலையை குருணாக்கல், வதுளை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக் கூடிய "செக்"குகள்கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்*

**சேமிப்புப் பணம்:-**
*ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.*

**நிரந்தர சேமிப்பு:-**
*இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.*

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
*அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.*

**நாணயமாற்று:-**
*இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.*

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**
*ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.*

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

T. S. முத்துலிங்கசாமி
ஏஜெண்டு,

( Std 29 1-8—30-7-48 )

மலேயாவுக்கு நாகபட்டணம் மார்க்கமாக

# கப்பல் சீட்டு

[ மாசமிருமுறை கப்பல்கள் போகின்றன ]

யாழ்ப்பாணமிருந்து றெயில்வே ரிக்கற், சாப்பாடு, லக்
கேஷ்சார்ஷ் இருப்பிடச் செலவு எல்லாம் உட்பட,
நாகபட்டணமிருந்து பினங் செல்ல டெக் ரிக்கற்
ரூபா 130-க்கு எங்கள்மூலமாக பெற்றுக்கொள்ளலாம்

**வேறு செலவு உங்களுக்கு இல்லை**

*பல நூற்றுக் கணக்கானேர் எங்கள் மூலமாகப் பிரயாணஞ் செய்து திருப்தியடைந்துகொடுத்த நற்சாட்சிகள் அநேகமுண்டு.*

**வடஇலங்கையில் இவ்வகையில் முதல்ஸ்தானம் வகிக்கிறோம்**

எங்களிடம் மற்ற விபரங்களை நேரிலோ
லெட்டர் மூலமோ தெரிந்துகொள்ளலாம்.

ஸ்ரீ கதிர்வேல் அண்கோ,

252, காங்கேசன்துறை ரோட், :: சிவன்கோவிலடி, யாழ்ப்பாணம்
தந்தி (Srivel) :: :: பிராஞ்சு: நாகபட்டணம்.

3) 2—9—47&28-2-48

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna, on Tuesday December 23, 1947

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org